


**07.10.2026**

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த பாரத இலக்கு உறுதியாக எட்டப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி திட்டவட்டமாக தொிவித்துள்ளார்.

2. உதகையில் நடைபெற்ற சேவை ஜோதி பேரணியில் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தலைமையில் வளர்ச்சியடைந்த பாரதம் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

3. சென்னை மாதவரம் பால்பண்ணையில் ஆவின் மத்திய ஆய்வகத்தின் துணை கட்டிடத்தை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று திறந்து வைத்தார்.

4. தமிழகத்தின் மின் தேவையை சமாளிக்க 4 ஆயிரத்து 500 மெகாவாட் மின்சாரம் வெளிச்சந்தையிலிருந்து கொள்முதல் செய்யப்படும் என்று மாநில அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

5. தமிழகத்தில் வசிக்கும் இலங்கை அகதிகளுக்கு கூடுதல் வீடுகள் கட்டித்தரப்படும் என்று வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. தென்னரசு தொிவித்துள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

2047-ம் ஆண்டு வளர்ச்சி அடைந்த இந்தியா இலக்கு உறுதியாக எட்டப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி திட்டவட்டமாக தொிவித்துள்ளார்.

பிரதமரின் 25 ஆண்டுகால பொதுசேவை நிறைவை ஒட்டி புதுதில்லியில் நடைபெற்ற வளர்ச்சியடைந்த பாரதம் உறுதிமொழி இயக்கம் சார்ந்த நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், கடின உழைப்பாலும், அரசின் தொலைநோக்கு திட்டங்களாலும் இது சாத்தியமாகும் என்றார்.

கடந்த 12 ஆண்டுகளில் ஏற்றுமதி தொடர்பான பல சாதனைகள் படைக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் ஆக்கப்பூர்வமான மாற்றத்திற்கு வேளாண்மை சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று கூறிய அவர், 2015-ம் ஆண்டு முதல் 2025-ம் ஆண்டுவரையிலான வேளாண் வளர்ச்சியை சுட்டிக்காட்டினார்.

தற்போது பல்வேறு சவால்களுக்கு தீர்வு காணும் நாடாக நம்தேசம் உருவெடுத்துள்ளது என்றும் பெருமிதம் தொிவித்தார்.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370-வது அரசியல் சாசனம் ரத்து செய்யப்பட்டது,

தீவிரவாதத்தின் முதுகெலும்பு அகற்றப்பட்டது போன்றவற்றையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாரதத்திற்கான மிகப்பெரிய இலக்குகளை நிர்ணயிக்க ஏற்றத் தருணம் இது என்று குறிப்பிட்ட பிரதமர், மத்திய அரசின் கொள்கைகள் அனைத்தும் குடிமக்களுக்கு தீர்வுகளை தருவதாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் 25 ஆண்டுகால பொதுச்சேவை மற்றும் தேசப்பணியை கொண்டாடும் வகையில் உதகையில் நடைபெற்ற சேவை ஜோதி பேரணியில் மத்திய இணைமைச்சர் டாக்டர் எல்.முருகன் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய டாக்டர் எல். முருகன், தமிழகத்தில் 75 ரயில் நிலையங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும், 9 புதிய ரயில் பாதைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

ரிசர்வ் வங்கி

வங்கிகளின் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதத்தை ரிசர்வ் வங்கி 25 அடிப்படை புள்ளிகள் உயர்த்தி 5.5 சதவிகிதமாக நிர்ணயித்துள்ளது.

மும்பையில் ரிசர்வ் வங்கியின் இருமாத கடன் கொள்கையை இன்று வெளியிட்ட வங்கியின் ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா உலகளாவிய தேக்கநிலை மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதாக கூறினார்.

2023-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கு பின்னர் தற்போது தான் ரெப்போ வட்டி விகிதம் உயர்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே சில்லரை பணவீக்க விகிதம் கடந்த ஆகஸ்ட் மாதம் 4.82 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

இது அதற்கு முந்தையை மாதத்தை ஒப்பிடுகையில் புள்ளி 37 சதவிகிதம் கூடுதலாகும்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

சென்னை மாதவரம் பால்பண்ணையில் 2 கோடியே 23 லட்ச ரூபாய் மதிப்பிலான ஆவின் மத்திய ஆய்வகத்தின் துணை கட்டிடத்தை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று திறந்து வைத்தார்.

முன்னதாக பால்பண்ணையில் ஆய்வு மேற்கொண்ட அவர், 152 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புதிய பால் பண்ணையின் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

தொடர்ந்து பெரம்பூர் சட்டமன்ற அலுவலகத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை முதலமைச்சர் பெற்றுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

சேவா சங்கல்ப்

.. Music ..

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்த நிலையில், வளர்ச்சி அடைந்த பாரதப் பாதை என்ற பிரதமரின் தொலைநோக்கு பயணத்தின், மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, லட்சாதிபதி மகளிர் திட்டம் குறித்த செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. Music ..

கிராமப் பகுதிகளில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மகளிருக்கு ஆளுமை வழங்கி வருவாயை பெருக்கும் நோக்கத்தில் மத்திய அரசு லட்சாதிபதி மகளிர் திட்டத்தை நடைமுறைப் படுத்தியது.

இதன்படி மகளிர் அப்பகுதியில் உள்ள சுயஉதவிக் குழுக்களுடன் இணைந்து, வாழ்வாதார செயலாக்க திட்டங்கள் மூலம் ஆண்டுக்கு ஒருலட்சம் ரூபாய் வருவாய் பெறுவதை நோக்கமாக கொண்டுள்ளது.

திறன் மேம்பாட்டு பயிற்சிகள், நிதியுதவிகள், கடன் வசதிகள், தொழில் முனைவிற்கான ஆலோசனைகள், சந்தை வாய்ப்புகள் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன.

நாடுமுழுவதும் 6 கோடி லட்சாதிபதி மகளிரை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தொிவித்துள்ளார்.

கிராமப்புற மகளிர் பொருளாதார ஆளுமை பெறுவதால் அவர்தம் குடும்பங்களின் பொருளாதாரம் மேம்பட்டு வளர்ச்சியடைந்த பாரதத்திற்கு வழிகோலும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த திட்டம் குறித்து திருச்சியை சேர்ந்த பெருநகர, சமூக பொறுப்புணர்வு அமைப்பின் இயக்குநர் டாக்டர் கீதா ஜெகந்நாதன் எடுத்துரைக்கையில்

❖❖❖❖❖❖❖❖

நிர்மல் குமார்

தமிழத்தில் மின்சார தேவையை பூர்த்தி செய்வதற்காக 4 ஆயிரத்து 500 மெகாவாட் மின்சாரம் வெளிச்சந்தையிலிருந்து கொள்முதல் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தொிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், வரும் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் மின்தேவை அதிகரிக்கும் என்பதால் இம்முடிவு எட்டப்பட்டுள்ளது என்றார்.

இது கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் நுகர்வோர் பயன்பாடு அதிகம் உள்ள நேரங்களில் தற்போது கூடுதலாக 3 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தேவைப்படும் நிலையில், மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்திற்கு 3 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் கிடைக்கவில்லை என அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

தென்னரசு

தமிழகத்தில் வசிக்கும் இலங்கை அகதிகளுக்கு கூடுதல் வீடுகள் கட்டித்தரப்படும் என்று வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. தென்னரசு தொிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் பகுதியில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் 22 லட்சம் ரூபாய் மதிப்பிலான புதிய படிப்பகத்தை இன்று திறந்து வைத்து பேசியஅவர், இலங்கை தமிழர் வரலாற்றை தொிந்துகொள்ளவும், கல்வி அறிவை மேம்படுத்தவும் இப்படிப்பகம் பயனளிக்கும் என்றார்.

இலங்கை தமிழர் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் படி ஆயிரத்து 800 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இங்குள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

தாராபுரம்

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளை மறுநாள் நடைபெறுவதற்கான அனைத்து முன்னேற்பாட்டு பணிகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விரு தொகுதிகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மையம் வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில் சீர் வைக்கப்பட்டது.

வாக்கு எண்ணிக்கை மையத்தை சுற்றி துப்பாக்கி ஏந்திய மூன்றடுக்கு போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மதுராந்தகம் இடைத்தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பதிவு இயந்திரங்கள் செங்கல்பட்டு அருகே ஆத்தூரில் உள்ள ஒருங்கிணைந்த சமூக மேம்பாட்டிற்கான பயிற்சி மையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை மையம் முழுவதும் 54 கேமரா பொருத்தப்பட்டு கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்த பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.... வாய்ஸ் ...

தாராபுரம் சட்டப்பேரவை இடைத்தேர்தல் வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணும் மையமான திருப்பூர் பல்லடத்தில் உள்ள L.R.G. அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

செங்கோட்டையன்

ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையம் அருகே பொலவக்காளி பாளையம் எல்லமடை வழித்தடத்தில் அரசு பேருந்து சேவையை மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசியஅவர், மாநில அரசிற்கு 13 லட்சம் கோடி ரூபாய் கடன்சுமை இருந்தாலும், மக்கள் பணிகள் தொய்வில்லாமல் நடைபெறுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

கோவை

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் கனமழையால் கோவை குற்றால அருவியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து தற்காலிகமாக சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலா பயணிகள் இப்பகுதிக்குள் அத்துமீறி நுழைய வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

தேனி மாவட்டம் கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறை தடைவிதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

வானிலை

உள்தமிழகம் மற்றும் தெற்கு உள்கர்நாடகா வழியாக காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுவதால் கோவை மாவட்ட மலைப்பகுதிகள், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களின் கடலோர பகுதிகள்

நீலகிரி கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தொிவித்துள்ளது.

தேனி, தென்காசி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி உட்பட 18 மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஆர்டிக் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் H.S. பிரணாய், தருண் மன்னேபள்ளி, ரவ்னக் சௌஹான் ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

பின்லாந்தில் இந்த போட்டிகள் நடைபெறுகின்றன.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖